பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 25 வெள்ளிக்கிழமை 11.10.2024 கதிர் 338



## தேசிய மக்கள் சக்திக்கு சவால்விட வேறு எந்தக் கட்சியுமே இல்லை

### லால் காந்த தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும்வகையில்,நாட்டில்எந்தவொரு கட்சியும் இல்லையெனவும், நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தேசிய மக்கள்சக்தியுடன்இணைந்துள்ளதாகவும் அக்கட்சியின் செயற்குழு உறுப்பினர் லால்காந்த தெரிவித்தார்.

நாவலப்பிட்டியில்நேற்றுநடைபெற்ற பொதுத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் ☞ 8

## மகிந்த, சமல், பஸில் மூவரும் இம்முறை போட்டியில்லை

எதிர்வரும்நாடாளுமன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முன்னாள்அமைச்சர்களான சமல்ராஜபக்ச,பஷில்ராஜபக்ச ஆகியோர் போட்டியிடவோ தேசியப் பட்டியலில் இடம்பெறவோ ☞ 8

## ஷானி மீண்டும் சேவையில்

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர நேற்று முதல் பொலிஸ் சேவையில் இணைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் ☞ 8

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு புதிய பணிப்பாளர் பதவியேற்பு

விசாரணைஆணைக்குழுவின்பணிப்பாளர்நாயகமாக சட்டத்தரணி எம்.ஆர்.வை.கே உடவெல ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர்நேற்றையதினம்தனதுபதவியைபொறுப்பேற்றுக் கொண்டார். ☞ 8

## இனியது ரகசியம் அல்ல!

தமிழ்தேசியப்பொதுக்கட்டமைப்பு என்ற ஒன்றை அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் சேர்ந்து உருவாக்கியதில் முன்னாள் நின்று செயற்பட்டவர்களில் ஒருவர் ஜதீந்திரா என்கிற பத்திரிகை யாளர்; பத்தி எழுத்தாளர். டான் தொலைக்காட்சியினால்ஏற்படுத்தப்பட்ட வடக்கு கிழக்கு மக்கள் மன்றத்தின் சார்பில் தான் செயற்படுகிறார் என்று தெரியப்படுத்தி வந்தார். டான் குழுமத்தில் பணியாற்றியும் வருகிறார். இந்த வடக்கு கிழக்க மக்கள் மன்றம்தான், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்ற காவடியை முதலில் தூக்கித் திரிந்தது. அதன் பிறகுதான் அதனை அரசியல் கட்சிகளும்தமிழ்மக்கள்பொதுச்சபை எனப்படுவோரும் தமது தோள்களில் தூக்கிச் சுமந்தனர்.

இந்த தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பைஏற்றுக்கொள்ளாத, ☞ 2

## மாவையின் கோரிக்கை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கையைச் சுமந்து தேர்தலில் போட்டியிடும்வேட்பாளர்களைவெற்றிபெறச் செய்யுங்கள் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளர் ☞ 8

## மத்திய வங்கி முன்னாள் ஆளுநர்

# அஜித் கப்ரால் மீது நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல்

### மேலும் மூவருக்கு எதிராகவும் சமர்ப்பிப்பு

**மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட 4 பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று குற்றப்பத்திரிகைதாக்கல்செய்யப்பட்டுள்ளது.**

**2012ஆம் ஆண்டு கிரேக்கம் பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த போது, அந்நாட்டின் திறைசேரிப் பத்திரங்களை கொள்வனவு செய்ததன் மூலம் 184 கோடி ரூபாவுக்கும்அதிகஇழப்பைஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இவ்வாறு குற்றப்பத்திரிகைதாக்கல்செய்யப்பட்டுள்ளது.**

**குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து, பிரதிவாதிகளை தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான பிணை** ☞ 2

## ஜனநாயகக் கூட்டணி 11 ஆசனங்கள் பெறுமாம்


எதிர்வரும்பொதுத்தேர்தலில்ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி 11 ஆசனங்களை பெறும் என கூட்டணியின் வேட்பாளரும் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வன்னி தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனுவை நேற்று தாக்கல் செய்துவிட்டு செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னியில் எமது அணி சார்பில் போட்டியிடும் அத்தனை பேரும் ☞ 8

## பதில் பிரதம நீதியரசர் நேற்றுப் பதவியேற்பு

இலங்கையின் பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசராக மூர்து நிரூபா பிதுஷினீ பெர்னாண்டோ நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார். ☞ 8



## அமெ. கடற்படை அதிகாரி ஜனாதிபதியுடன் சந்திப்பு

அமெரிக்க பசுபிக் கடற்படையின் கட்டளை அதிகாரி அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர், நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவை சந்தித்தார்.

இந்து சமுத்திரத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பாதுகாப்பு சவால்களுக்கு முகங்கொடுத்தல், கடல்சார் பிராந்தியங்கள் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் அனர்த்தங்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துதல் ☞ 2

## பொதுத் தேர்தலில் ஒதுங்கியது சம்பிக்க ரணவக்கவினது கட்சி

தமது கட்சியான ஐக்கிய குடியரசு முன்னணியுடன் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறியதால் இம்முறை பொதுத் தேர்தலில் தமது கட்சியிலிருந்து எவரும் போட்டியிட மாட்டார்கள் என கட்சியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பாட்டலி சம்பிக்க ரணவக்கதலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணி கட்சி 2023ஆம் ஆண்டு மே 22 தொடங்கப்பட்டது. அதன் பின்னர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒப்பந்தமிட்டு சஜித் பிரேமதாசவிற்கு ☞ 8

## ஐந்து நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதியுடன் நேற்று பேச்சு

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவை நேற்று ஐந்து நாட்டுத் தூதுவர்கள் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர். சவூதி அரேபியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பாலஸ்தீனம், துருக்கி ஆகிய ☞ 2

## குருசுவாமியும் ஒதுங்கினார்

'ஜனநாயக மக்கள் முன்னணியின்' பொதுச்செயலாளர் பதவியிலிருந்தும் 'தமிழ் முற்போக்கு கூட்டணியின்' அரசியல் குழு உறுப்பினர் பதவியிலிருந்தும்வெளியேறியகே.ரீ.குருசுவாமி ☞ 8

## "அனுமதி பெறுங்கள்"

### ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்து

பல்வேறு நிகழ்வுகளுக்காக பெயர்ப் பலகைகள் மற்றும் விசேடநினைவுசஞ்சிகைகளுக்கு ஜனாதிபதியின் புகைப்படங்கள் மற்றும் வாழ்த்து செய்திகளை வெளியிடுவதற்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தின் எழுத்துமூல அனுமதியை அனைத்து அரச ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அதில் இடம்பெறாத கட்சியாக இருந்தது தமிழ் அரசுக் கட்சி. அந்தக் கட்சிக்குள் இருந்த எட்டப்பர் அணியைத் தவிர்த்து கட்சி அந்தக் கருத்தியலை எதிர்த்தது. ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரித்தது. கடைசியில் பொதுக் கட்டமைப்பு நிறுத்திய ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரன் சரியாக விலைபோகாமல் 2 லட்சத்துச் சொச்ச வாக்குகளை மட்டும் பெற்றார். பொதுக் கட்டமைப்புக்காரர்கள் எதிர்பார்த்த 50 சதவீத வாக்குகளைக்கூட அவரால் பெறமுடியவில்லை. பெற்ற வாக்குகளிலும் யாழ்ப்பாணத்தைத் தவிர வேறு எங்கும் பெரியளவில் வாக்குகள் விழவில்லை. அரியநேத்திரனின் சுயேச்சைக் குழுச் சின்னமானசங்குபின்னர்ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அபகரிக்கப்பட்டது. இந்த முயற்சிகளில் சரி அரைவாசிப் பங்கைக் கொண்டிருந்ததமிழ்மக்கள்பொதுச்சபையின் உறுப்பினர் இந்தப் பத்திரிகையாளர் ஜதீந்திரா. பொதுக் கட்டமைப்பின் தலைப்பீடமான 14 உறுப்பினர்களிலும் ஒருவர்.

இதெல்லாம் பழங்கதைகள். இந்த விடயத்தில் புதுக் கதை என்னவென்றால், இந்த ஜதீந்திரா இப்போது திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் பெயரில் வீட்டுச் சின்னத்தின் கீழ் போட்டியிடுகின்றார். அந்த மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகள் சேர்ந்து தமிழ்அரசுக்கட்சியின்கீழ்போட்டியிடுகின்றன. தமிழ் அரசுக் கட்சிக்கு 4 இடங்களும் மற்றைய கட்சிகளுக்கு 3 இடங்களும் ஒதுக்கப்பட்டன. இந்த இரண்டு இடங்களுக்கு ரெலோ, ஈபிஆர்எல்எவ், தமிழ்த் தேசியக் கட்சி ஆகியன இணைந்து இருவரை நியமித்தன. தமது கட்சிகளில் வேட்பாளர்கள் இல்லாததால் ஏற்கனவே தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்களாக இருந்தவர்களைத்தான் அவை வேட்பாளராக நியமித்துள்ளன. புளொட் சார்பில் நியமிக்கப்பட்டிருப்பவர் யார் என்றால் இந்த யதீந்திராதான்.

பொதுக் கட்டமைப்பில் இடம்பெற்ற பொதுச் சபையின் தலைமைப் பீட உறுப்பினர் இவர். அதன் மூலம் பொதுக் கட்டமைப்பின் உறுப்பினரும்கூட. இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பொதுச் சபை பங்கேற்கப்போவதில்லை என்றும் எந்தக் கட்சியையும்ஆதரிக்கப்போவதில்லைஎன்றும் தெரிவித்திருந்தது. அதுபோன்றேஜனாதிபதித் தேர்தலில் தமது சுயேச்சை வேட்பாளரால் பயன்படுத்தப்பட்டசங்குசின்னத்தைதேர்தலில் பயன்படுத்த வேண்டாம் என்றும் கோரி இருந்தது. ஆனால், அதே பொதுச்சபையின் தலைமைப்பீட உறுப்பினரான ஜதீந்திரா, பொதுச் சபைக்கு துரோகம் செய்து சங்குச் சின்னத்தை அபகரித்த புளொட் கட்சியின் ஊடாக, தமக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தல் களத்தில் தனித்து நின்று சமராடி வென்ற தமிழ் அரசுக் கட்சியின் கீழ் அதன் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றார். "அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா'' என்கிற கவுண்டமணி வசனம்தான் காதுகளில் ரீங்காரமிடுகின்றது.

..................

இந்தத் தடவை தேர்தல் பணிகளுக்குச் சென்றால் ஆளுக்கு நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய், மூன்று நேரச் சாப்பாடு, மதுப் பிரியர்களாயின் இரவில் தாராளமாக மது எல்லாம் கிடைக்கும். நேற்று யாழ்ப்பாணத்தில் ஒரு வேட்பாளர், தேசியப் போலிகளில் ஒருவர் தனது கட்சியைச் சேர்ந்த 15 பேரை அழைத்து இந்தப் பேரம் பேசலுக்குக் கீழ் அவர்களைத் தனக்குப் பணியாற்றும்படி கேட்டிருக்கிறார். இந்த நாடாளுமன்றத் தேர்தலில்அவரதுநியமனம்கட்சிக்குள்ளேயே பெரும் எதிர்ப்பைக் கிளப்பியிருக்கின்றது. தேர்தலில் தாம் அவருக்கு எதிராகத்தான் பணியாற்றுவோம் என்று யாழ்ப்பாணத்தில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் எல்லோரும் நாண்டுகொண்டு நிற்கிறார்கள். தமது கட்சியிலிருந்து பிரிந்துசென்றவர்களுடன் இது தொடர்பில் பேசி, நாங்கள் உங்களுக்குப் பணியாற்றுவோம்என்று உறுதிமொழிகளும் வழங்கியிருக்கிறார்கள். அதனால் கட்சியில் மிக அண்மையில் சேர்ந்த 15 பேரை அழைத்துத்தான் இந்த மதுபான விருந்தோடு கூடிய பணிக்கு அழைத்திருக்கிறார் அந்த வேட்பாளர். இப்படிப்பட்ட வேட்பாளர்கள் நாடாளுமன்றஉறுப்பினரானால்சாராயக்கடை அனுமதிக்கு 'கியூ'வில் நிற்காமல் வேறு என்னதான் செய்வார்கள். அதுவும்போக கொழும்பில் வாடகைக்குக் குடியிருந்த வீட்டையே ஆட்டையைப் போட்டவர்களுக்கு மதுவை ஊற்றி இளைஞர்களை மயக்குவது ஒரு பிரச்சினையா என்ன!

......................

தென்மராட்சி அம்மணி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன்பே கட்சி தாவலில் சாதனை படைத்துவிடுவார் போலுள்ளது. முதலில் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து தாவினார். ஜனநாயகக் கூட்டணிக்குள் ரெலோவின் ஊடாகத்தான் புகுந்தார். அந்தக் கட்சியின் வேட்பாளர் ஒருவரோடு கூட்டு வைத்தார். இருவருமாகச் சேர்ந்து தேர்தல் கேட்பது, ரெலோ வேட்பாளரே எல்லாச்செலவுகளையும் ஏற்பது, மூன்றாவது விருப்பு வாக்கைச் செலுத்துமாறு பரப்புரை செய்வதில்லை என்றெல்லாம் ஒப்பந்தம் செய்துகொண்டார். ஆனால், அவர் ஒப்பந்தம் செய்துகொண்டவர் மலைவிழுங்கிமகாதேவன்என்பதுஅவருக்கு பின்னால்தான் விளங்கியிருக்கிறது. அவரோடு சேர்ந்து கேட்டால் உங்களுக்கு விழும் வாக்குகளும் விழாது என்று மற்றவர்கள் போட்டு மிரட்ட, பதறிப் போன அம்மணி, என்னை மிரட்டாத குறையாகத்தான் அந்த ஒப்பந்தத்துக்கு இணங்க வைத்தார்கள் என்று உளறுகிறார். அவரது உளறலைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்ட புளொட் கிஷோரும் மயூரனும் அம்மணிக்கு இப்போது ஆபத்தாந்தவர்களாக மாறியிருக்கிறார்கள். நீங்கள் ஒன்றும் பயப்படவேண்டாம், அவரைப் பற்றி (ரெலோ வேட்பாளரை) கவலைப்படாதீர்கள், அவருடனான ஒப்பந்தத்தைத் தூக்கி வீசிவிட்டு நீங்கள் புளொட்டோடு வாருங்கள், நாங்கள் எல்லாம் பார்த்துக்கொள்கிறோம், சித்தார்த்தன், கஜதீபனோடுசேர்த்து புளொட் உங்களுக்கான பரப்புரைகளைப் பார்த்துக்கொள்ளும் என்று உறுதியளித்திருக்கின்றார்கள். இப்போது அதை நம்பிக்கொண்டு ரெலோவில் இருந்து புளொட்டுக்குத் தாவியிருக்கிறார் அம்மணி. ஒருவேளை தேர்தலில் வென்றால் இன்னும் எத்தனை இடத்திற்குத் தாவுவாரோ தெரியாது. பாவம் அந்த மாமனுசன்.

...............................

தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வேட்பாளர் வாய்ப்புக்கிடைக்காததால்வெளியேறியவர்கள் சேர்ந்த அமைத்துள்ள கூட்டுக்குப் பெயர் ஜனநாயகத் தமிழ் அரசுக் கூ-ட்டமைப்பாம். நேற்று அதன் தலைவர் சட்டத்தரணி தவராசா இதனை அறிவித்தார். முதலில் ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சி என்றுதான் பெயரிட முனைந்தார்கள். ஆனால் ஏற்கனவே தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒருத்தர் அந்தப் பெயரில் முன்னர் ஒரு அணியை வைத்திருந்தார் என்பதால் பின்னர் கூட்டமைப்பு என்று மாற்றிவிட்டார்கள். மாவையரின் மகன் கலையமுதனும் இந்தக் கூட்டணியில்தான் இருக்கிறார். தமிழ் அரசுக் கட்சி இந்தத் தேர்தலில் வெற்றிபெற, தன் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்ற சிறீதரனுக்கு தந்தை மாவை வாழ்த்துச் சொல்ல, மகன் கட்சிக்குத் துரோகம் செய்தவர்களோடு கூட்டுச் சேர்ந்திருக்கிறார்.

இந்த அணியினர் இன்று வேட்புமனு தாக்கல் செய்கிறார்கள். இந்த சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்கள் நேற்று வேட்புமனுக்களில் கையொப்பம் இட்டனர். வாக்குகளுக்காக ரெலோவில் வாய்ப்பு மறுக்கப்பட்ட ஒருவரையும் தம்மோடு சேர்த்துக்கொள்வதற்காக அவரை நேற்று துரத்து துரத்தென்று துரத்தியிருக்கிறார்கள். இவர்களோடு போய் தனது பெயரையும் கெடுத்துக்கொள்ள விரும்பாத அந்த நபர் தலைதெறிக்க ஓடியும் இல்லாத பொய்களை எல்லாம் சொல்லியும் இவர்களில் கைகளில் பிடிபடாமல் தப்பிவிட்டார் என்று கேள்வி.

இந்தஜனநாயகத்தமிழ்அரசுக்கூட்டமைப்பு தாங்கள்தான் செல்வாவின் கட்சி என்றும் அதனால்மற்றையகட்சிகளைத்தம்மோடுவந்து சேருமாறும் அழைப்பு விடுத்திருக்கிறார்கள். பரவாயில்லை ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணிக்கு 6ஆவது கட்சி அல்லது பொதுக் கட்டமைப்புக்கு 7ஆவதுகட்சிகிடைத்திருக்கிறது. இப்படி கட்சிகளின் எண்ணிக்கையைப் பெருக்கிக்கொண்டே போய் அகில உலக மகா கூட்டணி ஒன்றை உருவாக்கியாவது தமிழர்கள் உலகில் சாதனை படைக்கத்தானே வேண்டும்! என்ன வாசகர்களே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அஜித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் விடுவிக்க மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன், பிரதிவாதிகளுக்கு வெளிநாடு செல்ல தடை விதித்ததுடன் கடவுச்சீட்டுகளை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

# கந்தளாய் சீனித் தொழிற்சாலை காணியை பங்கிட அநுர பணிப்பு

## குறுங்கால விவசாய நடவடிக்கைகளுக்காக

கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான 11,000 ஏக்கர் காணியை குறுகிய கால பயிர் செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அதற்கமைய ஐந்து ஏக்கரைவிடக் குறைவான காணி இவ்வாறு வழங்கப்பட வுள்ளதுடன், அதற்கென ஒழுங்கான பொறிமுறைமையொன்றைதயாரிக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் அதிகாரிகளை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று சந்தித்த போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்றவகையில், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி கேட்டறிந்ததோடு, எதிர்கால திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம். விக்ரமசிங்க, காணி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஹேமசிறி லியனகே மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# ஜோன்ஸ்டனுக்குத் தடை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பயணத்தடை விதித்துள்ளது.

பதிவு செய்யப்படாத சொகுசு காரைப் பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பிலேயே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனம் இங்கிலாந்துக்கு அனுப்புவதாக கூறி இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாகவும், ஆனால் அது இலங்கையில் பதிவு செய்யப்படவில்லை எனவும், போலி இலக்கத்தை பயன்படுத்தி வீதியில் பயணிப்பதாகவும் குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த காரை இலங்கைக்கு கொண்டு வந்தவர்கள் யார், எப்போது கொண்டு வந்தார்கள் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர்.

ஹில்டன் ஹோட்டலின் வாகன தரிப்பிடத்தில் சந்தேகத்துக்கிடமான வகையில் இந்த கார் நிறுத்தப்பட்டுள்ளதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## அமெ. கடற்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாதம் போன்ற சர்வதேச அச்சுறுத்தல்களுக்கு எதிராக போராடுவதில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்த அட்மிரல் கோஹ்லர், போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளையும் பாராட்டினார்.

கடற்படைப் பிரிவின் மனிதவள பயிற்சிக்கு அமெரிக்காவின் ஆதரவு தொடர்ந்தும் இலங்கைக்கு வழங்கப்படும் என அமெரிக்க பசுபிக் கடற்படையின் கட்டளை அதிகாரி அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

## ஐந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளைச் சேர்ந்த தூதுவர்களே தனித் தனியாக ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் நசார் அல்தசம் அல்கஹ்தானி நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றிக்கான சவூதி அரேபியாவின் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸின் வாழ்த்துச் செய்தியை, தூதுவர் அல்கஹ்தானி ஜனாதிபதியிடம் கையளித்தார். பிராந்தியத்தின் தற்போதைய நிலைமை, சவூதி அரேபியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் நீண்டகால ஆதரவு மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கு தூதுவர் அல்கதானி தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.

சவூதி அரேபியாவுக்கான இலங்கை தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பது தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பிலும் ஜனாதிபதி மற்றும் தூதுவரின் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான தேசிய கொள்கையொன்றை வகுக்க அரசாங்கத்தை ஊக்குவித்த சவூதி அரேபிய தூதுவர், சவூதி அரேபிய முதலீடுகளை இந்நாட்டிற்கு ஈர்ப்பதற்கு இலங்கையில் சாதகமான சூழலை உருவாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கையில் ஏற்கனவே சவுதி அரேபிய முதலீடுகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் எதிர்கால ஒத்துழைப்பை மேம்படுத்த முடியும் என்றும் தூதுவர் மேலும் சுட்டிக்காட்டினார். இந்த சந்திப்பின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகள் மேலும் வலுவடையும் என தூதுவர் அல்கஹ்தானி குறிப்பிட்டார்.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஆணையர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) பஹீம் உல் அஸீஸ் ஹி நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதிக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்த பாகிஸ்தான் உயர்ஆணையர், இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கு பாகிஸ்தானின் அர்ப்பணிப்பையும் வலியுறுத்தினார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், பாகிஸ்தான் ஜனாதிபதி அஸீப் அலி சர்தாரியின் விசேட வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கையளித்தார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் 'இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நெருங்கிய உறவை நான் பெரிதும் பாராட்டுகிறேன். ஜனநாயகம், பன்மைத்துவம், சட்டத்தின் ஆட்சி, பரஸ்பர புரிதல் மற்றும் மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் எமது ஒத்துழைப்பின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் எதிர்பார்க்கிறேன். இது நம் இரு நாடுகளுக்கும் நல்ல நிகழ்வுகளை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்' என்று பாகிஸ்தான் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நீண்டகால அரசியல் மற்றும் பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் பாகிஸ்தான் உயர்ஆணையர் ஆகியோர் கலந்துரையாடியதுடன், பாதுகாப்புத் துறையில் பாகிஸ்தானின் ஆதரவு இலங்கைக்கு வழங்கப்படும் என உயர்ஆணையர் உறுதியளித்தார்.

கல்வித் துறையில் இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது. தற்போது, மருத்துவக் கல்விக்காக இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தானில் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவதுடன், எதிர்காலத்தில் விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளுக்கான வாய்ப்புகள் வழங்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

கிராமிய வறுமையைக்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# சுயேச்சை சின்னமாக இருந்த 'சங்கு' சின்னம் தற்போது கட்சி சின்னமாக மாறியிருக்கிறது

## சிறிநேசன் ஆதங்கம்




ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக பா.அரியநேத்திரன் சங்கு சின்னத்தில் தமிழ் மக்களின் ஒற்றுமை கருதி போட்டியிட்டிருந்தார். ஆனால் தற்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் சின்னமாக சங்கு சின்னம் அமைந்துள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்கள் தற்போது தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ் பொதுமக்கள் சபை, ஜனாதிபதி தேர்தலின் போது சுயேச்சை சின்னமாகதான் சங்கு சின்னம் அமைந்துள்ளது. இப்போது அந்த சங்கு சின்னம் என்பது ஒரு கட்சியின் சின்னமாக மாற்றப்பட்டிருக்கின்றது. அதாவது ஜனநாயகம் தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது குத்து விளக்கு சின்னத்தை விட்டு விட்டு சங்கு சின்னத்தை எடுத்திருக்கின்றனர்.

இந்த பொதுமக்கள் சபை சார்பாக நிறுத்தப்பட்ட அந்த தமிழ் வேட்பாளருக்கு ஒரு பகுதியினர் ஆதரவு அளித்தனர். இன்னுமொரு பகுதியில் இந்த தொலைபேசி சின்னத்தில் போட்டியிட்டு ஐக்கிய மக்கள் சக்தியை வேட்பாளருக்கு ஆதரவளித்திருந்தனர்.

ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்துவிட்டது. இப்போது நாங்கள் சங்கு சின்னத்தையோ அல்லது தொலைபேசி சின்னத்தையோ பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை. இப்போது நாங்கள் தமிழரசு கட்சியின் சார்பாக வீட்டு சின்னத்தில் போட்டியிடுகின்றோம் என்றால் தமிழ் மக்கள் தங்களுடைய தாய் கட்சியான தமிழரசு கட்சிக்கு வாக்களிக்க வேண்டிய தேவை இருக்கிறது. எனவே தந்தை செல்வாவால் முன்னெடுக்கப்பட்ட அந்த தமிழர்களின் தாய் கட்சி என்று சொல்லப்படுகின்ற தமிழரசு கட்சிக்கு வாக்களிக்க வேண்டியது தமிழ் மக்களின் பொறுப்பாக இருக்கின்றது.

பொதுமக்கள் கட்டமைப்பின் சார்பாக போட்டியிட்ட தமிழ் வேட்பாளரின் சின்னமாக இருந்த சங்கு சின்னம் இப்போது ஒரு கட்சியின் சின்னமாக அதாவது குத்துவிளக்கில் சின்னமாக இருந்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு இப்போது சங்கு சின்னத்தை எடுத்துள்ளது. எனவே தமிழ் மக்கள் குழப்பம் அடையாமல் நீங்கள் இந்த முறை தமிழரசு கட்சி என்ற அடிப்படையில் நீங்கள் வீட்டு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை மிகவும் அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

இதில் குழப்பம் அடைய வேண்டாம் என்பதை மிகவும் அர்த்தம் சக்தியுடன் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.தமிழரசு கட்சி தமிழரசு கட்சியாகத்தான் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றது.

இந்த நிலையில் தமிழரசு கட்சிக்காக பல விண்ணப்பங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக அனுப்பப்பட்டிருந்தன. அதில் 8 விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. நியமன குழுவினர் 8 விண்ணப்பங்களை தெரிவு செய்திருக்கின்றார்கள்.

இந்நிலையில் எட்டுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருந்த நிலையிலும் அதில் தெரிவுகள் இடம்பெறாத நிலையில் வேட்பாளர்கள் வேறு கட்சிகளுக்கு வேறு சின்னங்களில் போட்டியிடக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றன.

எது எப்படியாக இருந்தாலும் தமிழரசு கட்சியைப் பொறுத்தவரையில் சகல கட்சிகளையும் அரவணைத்து செல்ல வேண்டிய தார்மீக பொறுப்பு இருக்கின்றது. இந்த தேர்தல் அவசர அவசரமாக ஏற்பட்டு ஒரு தேர்தல் என்று சொல்லலாம். ஜனாதிபதி தேர்தலை அடுத்து இந்த தேர்தல் இங்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றதனால், பல கட்சிகளையும் இணைத்து செயல்படுகின்ற செயற்பாட்டில் அவர்களுடன் இணைக்கின்ற அந்த முயற்சியில் சில இழுப்பறிகள் ஏற்பட்டன.

இதன் காரணமாக அவர்கள் தனித்துப் போட்டியிடுகின்ற போது அவர்களோடும் சில வேட்பாளர்கள் இணைந்திருக்கின்றார்கள். எனவே இனி வருகின்ற காலத்தில் சகல கட்சிகளும் இணைந்து பயணிக்க கூடிய விதத்தில் சகல கட்சிகளையும் இணைக்க வேண்டும் என்கின்ற பொது மக்களின் விருப்பம் இருக்கின்ற காரணத்தினால் அடுத்த தேர்தலுக்காக இந்த அனைத்து கட்சிகளும் இணைந்து பயணிக்க வேண்டும்.

தற்போது தமிழரசு கட்சியைப் பலப்படுத்துவதன் மூலமாக தாய் கட்சியானது ஏனைய கட்சிகளையும் இணைத்துக் கொண்டு செல்வதற்குரிய சந்தர்ப்பத்திலே நாங்கள் ஏற்படுத்த வேண்டும். என்னுடைய விருப்பமும் சகல கட்சிகளும் மீண்டும் இணைய வேண்டும் அதில் தனிப்பட்ட சில தன்முனைப்பு சிந்தனைகள் குறித்து நாங்கள் எல்லோரும் அடுத்த கட்டமாவது அடுத்த தேர்தலுக்காக வேண்டி ஒற்றுமையாக செயற்பட வேண்டிய பொறுப்பு இருக்கின்றது.

எனவே தமிழரசுக் கட்சியின் பலத்தின் ஊடாக ஏனைய கட்சிகளையும் அரவணைத்து செல்வதற்கான நடவடிக்கையில் எடுக்கப்படும் என்பதை கூறிக் கொள்கின்றேன் என அவர் இதன்போது தெரிவித்தார். (05)

# கண்டி விகாரமகாதேவி பெண்கள் கல்லூரி மாணவிகள் ஜனாதிபதி மாளிகை, அலுவலகத்தை பார்வையிட்டனர்





கண்டி விகாரமகாதேவி பெண்கள் கல்லூரியின் மாணவிகள் குழு புதன்கிழமை ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி அலுவலகம் மற்றும் கொழும்பு துறைமுக நகர் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.





ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு மற்றும் நாடாளுமன்ற மக்கள் தொடர்பாடல் பிரிவு ஆகியன இணைந்து செயற்படுத்தும் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகை, கொழும்பு துறைமுக நகரம் மற்றும் நாடாளுமன்றம் போன்றவற்றை பார்வையிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைய கண்டி விஹார மகாதேவி பெண்கள் கல்லூரி மாணவிகளுக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.



இதன்படி, பழைய நாடாளுமன்றத்தைப் பார்வையிட்ட பின்னர் மாணவிகளுக்கு நாடாளு மன்றத்தின் வரலாறு குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

ஜனாதிபதிசட்டப்பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஜே.எம். விஜேபண்டார, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் எயார் வைஸ் மார்ஷல் பந்துல ஹேரத் மற்றும் கண்டி விஹார மகாதேவிபெண்கள்கல்லூரியின் அதிபர் நிலக்ஷிகா ஹபுகொட உட்பட ஆசிரியைகள் குழுவினரும்இந்தச்சந்தர்ப்பத்தில்கலந்துகொண்டனர். (05)

# விஞ்ஞான ஆய்வுக்கூடத்தில் தீயால் 7 மாணவிகள் காயம்

பாணந்துறை பிரதேசத்தில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றின் விஞ்ஞான ஆய்வுகூடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 7 மாணவிகள் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவிகள் பாடவேளைக்காக பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை ஒன்றை நடத்திக்கொண்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட தீயில் சிக்கி காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மாணவிகள் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மாணவிகளின் உடல்நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பொருளாதார முன்னேற்றமும் கேள்விகளும்

இலங்கையின் பொருளாதார நிலை உறுதியாகவுள்ளது என உலகவங்கி தெரிவித்துள்ளது. எனினும் பொருளாதாரச் சீர்திருத்தங்களை தொடர்வது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

2024 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4.4 வீதமாக காணப்படும் என தெரிவித்துள்ள உலக வங்கி முன்னைய எதிர்வுகூறல்களைவிட இது முன்னேற்றகரமான நிலையெனக் குறிப்பிட்டுள்ளது.

தொழில்துறை மற்றும் சுற்றுலாத்துறையில் நான்கு காலாண்டுகளாக ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் முக்கியமான கட்டமைப்பு மற்றும் கொள்கை சீர்திருத்தங்களுமே இலங்கையின் பொரளாதாரம் நிலையான ஒரிடத்திற்கு முன்னேறக் காரணம் என உலக வங்கி தெரிவித்துள்ளது. எனினும் பொருளாதார மீட்சி இன்னமும் பலவீனமான நிலையிலேயே உள்ளது என குறிப்பிட்டுள்ள உலக வங்கி நுண்பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுதல், கடன்மறுசீரமைப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்வது, வருமானத்தை அதிகரித்து வறுமையை குறைப்பதற்காக கட்டமைப்பு சீர்திருத்தங்களை தொடர்ந்து முன்னெடுப்பது ஆகியவற்றிலேயே பொருளாதார மீட்சி தங்கியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது என்று இலங்கை அறிவித்து வெறும் இரண்டு வருடங்களுக்கு உள்ளேயே இந்தப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை இலங்கை எட்டிப் பிடித்திருப்பது குறிப்பிடத்தக்க அடைவு. அதேசமயம் இந்த அடைவை எட்டியுள்ள அதேசமயம் தொடர்ந்தும் இலங்கையின் அரசு நிர்வாகம் கடனிலேயே ஓடுகின்றது என்பதும் கவனிக்கப்படவேண்டியது.

எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தை இலங்கையால் முழுமையாக எட்டமுடியவில்லை. வரி அதிகரிப்பு நாட்டில் பெரும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு பெரும் அரசியல் மாற்றத்திற்கு வித்திட்ட முதன்மைக் காரணிகளில் ஒன்று இந்த வரி அதிகரிப்பு என்பதை மறுப்பதற்கில்லை. வரிகளைக் குறைப்போம் என்று கூறிக்கொண்டுதான் தற்போதைய அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தார். ஆனால், அவர் பொறுப்பேற்ற பின்னரும் இலங்கை கடன்வாங்கித்தான் ஆட்சியைக் கொண்டு நடத்துகின்றது. தொடர்ந்தும்பிணைமுறிகளைவிற்பதற்கானநடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்த நிலை தொடர்வது நல்லதல்ல.

நாட்டின் உற்பத்திப் பெருக்கம், மிகை உற்பத்தி எனபன இன்னும் சாத்தியமாகவில்லை. தேயிலை தவிர வேறு விவசாய உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நிலைக்கு இன்னும் முன்னேறவில்லை. ரணிலின் காலத்தில் விவசாய நவீனமயமாக்கல் தொடர்பில் சில முன்னெடுப்புக்கள் இருந்தன. ஆனால், அந்த முன்னெடுப்பு இந்தப் பெரும்போகத்தில் வீரியமாக முன்னெடுக்கப்படும் நிலை தற்போது காணப்படவில்லை என்பது உண்மை. ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் விவசாய நவீன மயமாக்கல் திட்டத்திற்கு என்ன நடக்கும் என்கிற கேள்விக்குறியில் அந்தப் பணிகளில் ஒரு மந்த நிலை தெரிகிறது. தன்னிறைவான விவசாய உற்பத்தி மற்றும் மிகை உற்பத்தி, ஏற்றுமதிப் பொருளாதாரம் இன்றி இலங்கை பொருளாதார மறுமலர்ச்சியை அடைவது சாத்தியமானதன்று.

தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கை என்ன என்பதும் இன்னும் தெளிவாகவில்லை. இந்த நிலையில் உலக வங்கி சொல்வதைப்போன்று பொருளாதார மறுசீரமைப்புப் பணிகளை மக்களின் எதிர்பார்ப்பான வரிக் குறைப்புக்கும் பொருளாதார முன்னேற்றத்திக்கும் இடையே சமன்படுத்துவது எப்படியென்பதையும் ஆட்சியாளர்கள் இன்னும் தெளிவுபடுத்தவில்லை. இந்த நிலையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி நிலை என்பது இன்னும் தெளிவற்றதாகவும், மாயத் தோற்றமுடையதாகவுமே தோன்றுகின்றது. அதன் நிலைத் தன்மையை தெளிவுபடுத்தவேண்டும் இந்த ஆட்சி.

# ஜனநாயக கூத்தணி

**என் சத்திய மூர்த்தி**

பத்திரிகை உலகில் ஒரு சொல்லாடல் உண்டு. 'பிரசுரத்திற்கு செல்வதற்கு முன்' என்ற அந்த பதம், ஒரு குறிப்பிட்ட நிகழ்வு மற்றும் அதன் தாக்கம் கடைசி நிமிடத்தையும் தாண்டி தொடரும் களநிலையை குறிப்பதற்கு பயன்படுத்தப்படும்.

தற்போதைய மின் செய்தி தளங்களுக்கு அத்தகைய பிரச்சினைகள் இல்லை. மாறாக, அரசியல்வாதிகள்; நிமிடத்திற்கு நிமிடம் அடிக்கும் அத்தர்பல்டிகளை உடன் செய்தியாக வெளியிட அவர்களுக்கு வசதி உள்ளது. என்ன, அந்த செய்தி தளங்களை இருபத்திநான்கு மணிதியாலங்களுக்கும் தொடர்ந்து படித்து வர நேரம் இல்லாத சாமானிய வாசகர்கள், இடைப்பட்ட காலத்தில் செய்தியாக்கப்பட்ட சில நிகழ்வுகள் குறித்து சரியான புரிதல் இல்லாமலே அடுத்த கட்டத்திற்குள் இழுக்கப்பட்டு விடுவார்கள்.

இதற்கு சிறந்த உதாரணம், ஜனாதிபதி தேர்தலை ஒட்டி, தமிழ் அரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா அடித்த லூட்டிகள்தான். அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி தலைவராக தொடர்கிறாரா என்ற சட்டச் சிக்கல் பேசப்படாமலே இருக்க, கட்சியின் அனைத்து தரப்பினரும் உள்குத்து அரசியல் செய்யும் பிரிவுகளும்கூட, அவர்தான் இடைக்கால தலைவர் என்று ஏற்றுக்கொண்டு மரியாதை அளித்து வந்தனர். ஆனால், அவர் ஆடிய ஆட்டம் எல்லாம், தொடர் கதையாகவோ அல்லது தொலைகாட்சி தொடராகவோ வடிவம் பெற்றால், அதனை யாரும் நம்ப மாட்டார்கள்.

### கவுண்டமணி காமெடி

சேனாதிராசா இப்போது தமிழ் அரசு கட்சியின் கடந்த காலமாகவே தன்னை மாற்றிக்கொண்டு விட்டார். தனது கட்சித் தலைவர் பதவியை உதறிவிட்டு, அதனை திரிகோணமலை நீதிமன்ற வழக்கில் சிக்கியிருக்கும் தேர்ந்ததெடுக்கப்பட்ட தலைவர் சிறீதரனிடம் கையளிப்பதாக அவருக்கு கடிதம் எழுதி உள்ளார். ஆனால், அந்த சிறீதரன் என்ன செய்துள்ளார்?

தன்னை ஆதரித்த குற்றத்திற்காக பதவி விலக நேர்ந்த சேனாதிராசாவைக்கைகழுவிவிட்டு, தன்னை எதிர்த்து அரசியல் செய்வதாக உலகமே நம்பும் சுமந்திரனுடன் கை கோர்த்துக் கொண்டுள்ளார். அல்லது, அவ்வாறான தோற்றத்தை இருவருமாகவே தோற்றுவித்துள்ளனர்.

அதாவது, நவம்பம் 14 நாடாளுமன்ற தேர்தலில் யாழ்பாண மாவட்டத்தில் தனது எதிரணியில் இருந்து சிறீதரனுக்கு மட்டுமே போட்டியிட வாய்ப்பளித்தார் சுமந்திரன், அதேசமயம் கட்சியின் முதன்மை வேட்பாளர் என்று இடத்தையும் சிறீதரனுக்கே விட்டுக் கொடுத்துள்ளார். இது போதாது என்று, கட்சியின் வேட்பாளர் படிவத்தை நிரப்பும் பணிக்காக, சிறீதரனின் கிளிநொச்சி இல்லத்திற்கே சென்று அதனை இருவருமாக சேர்ந்தே செய்துள்ளனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒருபக்கத்தில்பழையகவுண்டமணிகாமெடிதான் நினைவிற்கு வருகிறது. ''இது என்னப்பா...ஒருத்தன ஒருத்தன் தூக்கி சாப்பிடற அளவுக்கு நடிக்கிறான்'' என்ற அவரது டயலொக் இப்போது திரைக்கு வெளியேயும் அரங்கேறி வருகிறது.

கடந்த 2020 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னரும், சுமந்திரனும் சிறீதரனும் இரட்டை குழல் துப்பாக்கியாகச் செயல்பட்டார்கள். அன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உள்ளே, அன்றும் தமிழ் அரசுக் கட்சித் தலைவராக இருந்த சேனாதிராசாவையும் ப்ளொட், ரெலோ போன்ற கூட்டணி கட்சி தலைவர்களையும் ஒரு சேர ஓரம் கட்டினார்கள். இதனை அந்த இருவருமாவது மறந்திருக்க மாட்டார்கள் என நம்பலாம்.

உண்மை சுடும். ஆனால், உண்மை இதுதான். இன்றைய தமிழ் அரசு கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற வேட்பாளர்களில், சிறீதரன் மட்டுமே தன் சொல் கேட்கும் கணிசமான வாக்காளர்களை தனது கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து வைததிருக்கிறார். அவருக்கு வேட்பாளருக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தாலோ, அல்லது அவர் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டிருந்தாலோ, ஒன்றில் அவர் தனி அணியாகப் போட்டியிட்டிருப்பார். அல்லது தனது ஆதரவாளர்கள் தனக்கு மட்டும விருப்பு வாக்கை அளித்துவிட்டு நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று வாய்மொழி பரப்புரை மேற்கொண்டிருப்பார்.

அல்லது, இதுதான் அவரது எதிரணியினரின் எதிர்பார்ப்பாக இருந்திருக்க முடியும். இதற்கெல்லாம் பயந்துதான், சிறீதரனை அரவணைத்து அரசியல் செய்ய சுமந்திரன் முயன்றிருக்கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது. அப்படி என்றால், இந்த சுற்றில் வென்றவர், சுமந்திரனா, சிறீதரனா?

### ஓர் உறையில் இரு கத்தி

இது இப்படி என்றால். தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காத அல்லது வேண்டுமென்றே வாய்ப்பு மறுக்கப்பட்ட தவராசா, 'உதயன்' பத்திரிகை உரிமையாளர் ஈ சரவணபவன் ஆகியோர் ஒன்றிணைந்து தனியாக ஒரு சுதந்திர குழு மூலமாக நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடப் போகிறார்கள் என்பது கடைசி செய்தி. இதுவே இன்று மாலை, வேட்பு மனு தாக்கல் முடிவடையும் வரை, கடைசி வரை செய்தியாக இருக்குமா, என்பதும் கேள்வி.

இவர்களில் தவராசாவும் சுமந்திரனும், தலைநகர் கொழும்புவில் கட்சி அரசியலிலும் வெளியே, குறிப்பாக கட்சியின் சட்ட வல்லுனர்களாகவும் போட்டி மனப்பான்மையிலேயே தொடர்ந்து வந்துள்ளனர். இன்னும் சொல்லப்போனால், கட்சியின் மத்திய குழுவிலும் வேட்பாளர் தெரிவுக் குழுவிலும் தனக்கு இருக்கும் பெரும்பான்மையை பயன்படுத்தி, சுமந்திரன், தவராசாவை வைத்து செய்திருக்கிறார் என்றே இரண்டாமவரின் தரப்பு கருதுகிறது.

அதாவது, ஓர் உறையில் இரண்டு கத்திகள் இருக்க முடியாது அல்லவா? அல்லது, தாங்கள் இருவரும் இரட்டை குழல் துப்பாக்கி என்று இரு தரப்பினருமே எண்ணி செயல்பட்டிருக்க வேண்டுமா?

இது இப்படி என்றால், தவராசா- மற்றும் சரவணபவன் குழுவினருக்கிடையேகூட புதிய மோதல்களை எதிர்பார்க்கலாம் என்றே தோன்றுகிறது. காரணம், யாழ்பாண வேட்பாளர் பட்டியலுக்கு தேவையான ஒன்பது நபர்களைவிட அந்த குழுவிலும் அதிகமான, அதீதமானவர்கள், தமிழ் அரசு கட்சியில் இருந்து பிரிந்துவந்து போட்டியிட ஆர்வமாக உள்ளனர் என்று கருதப்படுகிறது.

இதில், எப்போதுமே சுமந்திரன் எதிரணியாக தனியாவர்தனம் வாசிக்கும் அனந்தி சசிதரனையும் உள்ளே இழுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன. அது உண்மையாகும் பட்சத்தில், அங்கும் அதிருப்தியாளர்கள் தோன்றி, மூன்றாவது அல்லது நான்காவது குழுவாக போட்டியிடுவார்களா, என்ன?

### கோல இழைக்குள் புகுந்து

கடைசி செய்திகளின்படி, தவராசா- மற்றும் சரவணபவன் வகையாறாக்கள், தங்களை 'ஜனநாயக தமிழ் அரசு கட்சி' என்று அடையாளப்படுத்திக் கொள்ளப் போகிறார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. பத்திரிகைச் செய்திகளை முன் வைத்து நோக்கும்போது, அந்தப் பெயருக்கான உடமை வேறு யாரிடமோ இப்போது உள்ளதாக தெரிகிறது.

இது தவிர, கடந்த வருடம் தமிழ் தேசிய கூட்டணி உடைந்த போது, ப்ளொட், ரெலோ ஆகிய இரு உறுப்பு கட்சிகளும் தங்களுக்கு முன்னர் காலம் சென்ற சம்மந்தன் காலத்திலேயே அரசியல் அனாதைகள் ஆக்கப்பட்ட சுரேஷ் பிரேமசந்திரன், ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் வகையாறாக்களுடன் சேர்ந்து தொடங்கிய அமைப்புக்கு 'ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி' என்று பெயர் வைத்து அழகு பார்த்துக்கொண்டார்கள்.

என்ன, தங்களுக்காக அவர்கள் தெரிவு செய்த 'குத்து விளக்கு' சின்னத்தில் ஒரு முறை கேட்பதற்கு முன்னரே, அதனை ஓரம் கட்டி வைத்து விட்டு, அவர்கள் தற்போது 'சங்கு' சின்னத்தில் களம் இறங்குகிறார்கள். ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்று மார்தட்டி களமிறங்கிய சமூக அமைப்பினர் தாங்கள் தெரிவு செய்யும் வேட்பாளர் முன் வைத்த நிபந்தனைகளை ஏனோ, தங்களை அரவணைத்த அரசியல் கட்சி தலைமைகளின் முன் வைக்கவில்லை. எனவேதானோ என்னவோ, சிவில் அமைப்பினர் பின்னலுக்குள் பாய்ந்து வெளியே வருவதாக நினைத்துக் கொண்டிருக்கும் போது, அவர்களோடு அடையாளம் காட்டிக்கொண்ட அரசியல் தலைவர்கள், கோலத்தின் இழைகளுக்குள்ளேயே புகுந்து வந்துள்ளனர்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனநாயக கூத்தணி

4ம் பக்க தொடர்ச்சி...........

பொது வேட்பாளருக்கான 'சங்கு' சின்னத்தை அவர்கள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சின்னமாக நாடாளுமன்ற தேர்தலில் சுட்டதை வேறு எந்த விதத்திலும் விளக்கி விடமுடியாது. அதாவது, வாக்களர்களுக்கு அறிமுகம் இல்லாத குத்து விளக்கு சின்னத்தில் கேட்பதைவிட, இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானர்கள் வாக்களித்த பொது வேட்பாளர் அரியநேத்திரனின் 'சங்கு' சின்னத்தில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதே நடைமுறைக்கு ஏற்றது என்று கருதி அவர்கள் செயல்பட்டுள்ளார்கள். இதனை எதிர்பார்த்துத்தானே, அவர்கள் தனி வேட்பாளர் என்ற கருத்தியலுக்குள் தங்களது ஒரு காலையாவது வைத்தார்கள்.

## உள் ஒன்று வைத்து...

என்ன, அவர்களில் தமிழ் அரசு கட்சியின் சிறீதரனையும், பின்னர் சேனாதிராசாவையும் தவிர்த்து, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்தன் ஆகியோர் சரிவர களப்பணி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை ஜனாதிபதி தேர்தல் பரப்புரை தொடங்கி முடிவது வரை கேட்க முடிந்தது. அந்த விதத்தில், சுரேஷ், ஸ்ரீகாந்தா போன்றோர் அந்த பிரச்சாரத்தில் முழுமையாக பணி செய்தனர் என்றே சொல்ல வேண்டும்.

இது போதாது என்று, தனி வேட்பாளர் பரப்புரையில் சுணங்கி இருந்த தலைவர்களும், சேனாதிராசா போலவே, உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசினார்கள் என்ற எண்ணம் வெகுவாக பரவி உள்ளது. அது அவர்களுக்கு அண்மைகாலமாக இல்லாமலே போன நம்பகத்தன்மையை மீண்டும் குலைத்துள்ளது. இதன் வெளிப்பாடு, இந்தத் தேர்தலில் தெரியுமோ, என்னவோ!

அந்த விதத்தில், சங்குச் சின்னத்தை தமதாக்கிக்கொண்ட ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினர், அது மட்டும் போதாது என்று, தமிழ் அரசுக் கட்சியில் வாய்ப்புக் கிடைக்காத சசிகலா ரவிராஜையும் தங்கள் அணியில் களம் இறக்கி உள்ளார்கள். அதாவது, சசிகலாவின் தனி செல்வாக்கிற்கு கிடைக்கும் வாக்குகள் தங்கள் அணியினருக்கும் பயனளிக்கும் என்று கருதியே அவர்கள் செயல்பட்டுள்ளார்கள்.

அதிலும் குறிப்பாக, ஜனநாயகக் கூட்டணியின் வேட்புமனுவில் சசிகலா சித்தார்த்தன் வீடு வரை சென்று கைசாத்திட்டுள்ளார். இதில் இரு தரப்பினரின் அவசரமும் தெளிவாகத் தெரிகிறது. எங்கே, தாங்கள் தாமதித்தால், அந்த இடத்திற்கு வேறொரு போட்டியாளர் வந்து விடுவாரோ என்ற அச்சமா?

எது எப்படியோ, சசிகலா விவகாரம், கடந்த தேர்தலில் அவரது மகள், சுமந்திரனை முன்னிறுத்தி. வாக்கு எண்ணிக்கை மையத்தில் அரங்கேற்றிய அடாவடிகளை ஏனோ நினைவிற்குக் கொண்டு வருகிறது. அப்போது, சுமந்திரன் தனது தாயாரின் தேர்தல் வெற்றியை திருடிவிட்டார் என்ற அளவிற்கு சசிகலா ரவிராஜின் மகள் பேசியிருந்தார்.

தனது குற்றச்சாட்டுகளை, சசிகலாவின் மகள், சமூக வலைதளங்கள் ஊடாக புலம்பெயர்ந்தோருடனும் பகிர்ந்துகொண்டார். சசிகலா தரப்பு என்னவோ, புலம்பெயர்ந்த அமைப்பினரின் சொற்படி அப்போது ஆடவில்லை. என்றாலும், சுமந்திரன் எதிர்ப்பு என்ற வட்டத்திற்குள் அவர்களும் சிக்கிக் கொண்டார்கள்.

## சண்டை- சச்சரவுகள்

அந்த விதத்தில், கடந்த இரண்டாண்டு காலத்தில், தமிழ் அரசு கட்சிக்குள்ளும், பரந்த தமிழ் அரசியல் பரப்பினுள்ளும் தோன்றியுள்ள பிரிவுகள், சண்டை-சச்சரவுகள் அனைத்துமே சுமந்திரனை மையப்படுத்தியே நிகழ்ந்துள்ளன. அல்லது, அவரால் தொடக்கி வைக்கப்பட்டுள்ளன என்றே கூறப்படுகிறது. சுமந்திரன் ஒருபுறம். தமிழ் அரசு கட்சியின் உள்ளேயும் வெளியே உள்ள தமிழ் அரசியல் மற்றும் சில சமூக தலைமைகள், தனித்தோ -சேர்த்தோ மறுபுறம் என்றும் தானே கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக அரசியல் அரங்கேறி வந்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் பேச்சுக்கள் சூடு பிடிக்கும் முன்னரே, அனைத்துத் தமிழ் தரப்பினரும் ஒன்று சேர்ந்து, தமிழ் அரசுக் கட்சியின் வீடு சின்னத்தில் கேட்கவேண்டும் என்று சுமந்திரன் அழைப்பு விடுத்தார். அதனை எதிர்கொண்ட சுரேஷ் பிரேமசந்திரன், கூட்;டமைப்பை உடைத்து தனியாக வெளியேறியது தமிழ் அரசு கட்சிதான் என்றும், எனவே அவர்களே தங்களது புதிய ஜனநாயக கூட்டணியில் சேர்ந்துகொள்ளவேண்டும் என்றும் பதிலிறுத்தார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், உள்ளாட்சி தேர்தல்களில் கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகள் தனியாகப் போட்டியிடவேண்டும் என்று சுமந்திரன் அறிவித்தபோது, சுரேஷ் தலைமையிலான ஈபிஆர்எல்எப் கட்சி, எப்போதோ, அந்த அணியை விட்டு வெளியேறி இருந்தது. எனவே, அன்றைய கூட்டமைப்பு குறித்துப் பேசுவதற்கு சுரேஷுக்கு எந்தவித தார்மீக உரிமையும் இருக்கவில்லை.

அதுமட்டுமல்ல. அவர் கூட்டமைப்பைவிட்டுச் செல்லும்போது, சம்மந்தனுடன் முரண்டுபிடித்துக்கொண்டுதான் வெளியேறினார். சுமந்திரன் அப்போது கட்சியின் முன்னிலையில் இருக்கவில்லை. சுரேஷ் வெளியேறியதற்குக் காரணம் சுரேஷ் தொடர்ந்து தேர்தல்களில் தோல்வியுற்று, கூட்டமைப்பிற்குள் அவரது பருப்பு வேகாமல் போனது மட்டுமே.

## தனித்துவம்

இந்த பின்னணியில், சுமந்திரனோ, தமிழ் அரசுக் கட்சியின் தனிமைத்துவத்தை காப்பாற்றுவதற்கும் அந்த கட்சியின் வீடு சின்னத்தின் தனித்துவத்தைப் போற்றுவதற்குமே தான் களமிறங்கி உள்ளதாக காட்டி வருகிறார். அதனை, கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்றே தோன்றுகிறது. ஆனால், அதுவே கட்சியின் தேர்தல் வெற்றிக்கு போதுமா?

இந்த கேள்விக்கு காலம்தான் பதில் சொல்ல முடியும். இடைப்பட்ட காலத்தில், தமிழ் அரசுக் கட்சியின் தந்தை செல்வா காலத்திய நினைவலைகளை போற்றும் விதமாகவோ என்னவோ, சுமந்திரன் தரப்பு அன்னாரது பேரனும், அவரது மகன் சந்திரஹாசனின் மகனுமாக இளங்கோவனுக்கு கட்சியின் யாழ்பாண வேட்பாளர் பட்டியலில் இடமளித்துள்ளது.

முன்னதாக, இனப்போரில் ஆதரவற்றவர்களாகவும் அனாதைகளாகவும் ஆக்கப்பட்டோருக்காக ஏதிலிகள் புனர்வாழ்வு மையம் ஒன்றை திறம்பட நடத்திவரும் சந்திரஹாசன், இனப்போருக்கு பிந்தைய தமிழர் அரசியலில் கால்விட்டு பார்த்துவிட்டு, 2013 வட மாகாண சபை தேர்தலுக்கு முன்னரே, பின் வாங்கி விட்டார். அதனைத் தொடர்ந்து அவரது மகள் ஒருவர் தமிழ் அரசு கட்சியோடு தன்னை அடையாளப்படுத்தி மக்கள் சேவையில் பங்கு பெற்றிருந்தார்.

தற்போது பல ஆண்டுகளாக, அரசு சாரா சேவை அமைப்புகளுடன் தொடர்பில் இருந்து வரும் இளங்கோவன் நேரடியாக தேர்தல் அரசியலில் களம் இறங்கி உள்ளார். அதன் தாக்கமும், அவருடைய அரசியல் எதிர்காலமும் தற்போதைய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் மூலம், தமிழர் பகுதிகளில் மட்டுமல்ல, ஒட்டு மொத்த தென்னிலங்கை அரசியலிலும் பிரதிபலித்தால், யாரும் ஆச்சரியப்பட கூடாது!


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்தும்முல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்


(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



# ஹரினி, விஜித ஹேரத் ஆகியோருக்கு அவர்களின் படம் போட்ட முத்திரைகள்





150 ஆவது உலக தபால் தினத்தை முன்னிட்டு பிரதமர் ஹரினி அமரசூரிய மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு அவர்களின் புகைப்படங்கள் அடங்கிய விசேட தபால் முத்திரைகள் கையளிக்கப்பட்டதாகத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உலகதபால்தினத்தைமுன்னிட்டுபுதன்கிழமை நடைபெற்ற விசேட நிகழ்விற்கு பிரதமர் ஹரினி அமரசூரிய மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட போதே பரிசாக இந்த தபால் முத்திரைகள் கையளிக்கப்பட்டன.

பிரதமர் ஹரினி அமரசூரிய மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு பரிசாக வழங்கப்பட்ட இந்த தபால் முத்திரைகள் உத்தியோகப்பூர்வமானது இல்லை எனவும் இதனைத் தபால் சேவைகளுக்குப் பயன்படுத்த முடியாது எனவும் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களும் தங்களது தனிப்பட்ட புகைப்படங்களைப் பயன்படுத்தி இவ்வாறான தபால் முத்திரைகளை உருவாக்க முடியும் எனவும் ஆனால் அவற்றைத் தபால் சேவைகளுக்குப் பயன்படுத்த முடியாது எனவும் தபால் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.(05)

# மாணிக்க கங்கையிலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

மாணிக்க கங்கையிலிருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக புத்தல பொலிஸார் தெரிவித்தனர்.

பெலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயதுடைய முதியவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சடலமாக மீட்கப்பட்ட முதியவர் கடந்த 7 ஆம் திகதி மாணிக்க கங்கைக்கு நீராடச் செல்வதாக கூறி வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ளார்.

இந்நிலையில், முதியவர் மீண்டும் வீடு திரும்பாததால் அவரது உறவினர்கள் அவரை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, மாணிக்க கங்கைக்கு அருகில் வைத்து முதியவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ஸ்ரீலங்கன் விமான சேவைக்கான புதிய பணிப்பாளர் சபை நியமனம்

*தேசிய விமான சேவை நிறுவனமான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் புதன்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் புதிய தலைவராக சரத் கனேகொட நியமிக்கப்பட்டுள்ளார்.*

*சரத்கனேகொட தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள புதிய இயக்குநர்கள் குழு விவரம்:*

1. *சரத் கனேகொட (தலைவர்)*
2. *அறிவார்ந்த துணிச்சல்*
3. *சுகத் ராஜபக்ஷ*
4. *எரங்க ரோஹான் பீரிஸ் குணதிலக்க*
5. *டி.அரந்தரா*
6. *ஆனந்த அத்துகோரல*
7. *லக்மால் ரத்நாயக்க*

*8. நிரஞ்சன் அருள்பிரகாசம் ஆகியோர் கொண்ட பணிப்பாளர் சபை நிறுவப்பட்டுள்ளது. (05)*

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர்
Kalaikkathir




# கண்ணப்ப நாயனார்



"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்னும் திருவாசகத்தின் வரிக்கிணங்க அழகும் வளமும் நிறைந்து காடுகள் சூழ இயற்கைப் பொழில் சிரிக்கும் உடுப்பூர் என்னும் ஊரிலே நாகன் என்னும் வேடுவத் தலைவர் வாழ்ந்து வந்தார். அவனுக்கு தத்தை என்னும் அழகிய மனைவியும் இருந்தாள். அவர்கள் இருவருக்கும் இறைவனின் பெரும் அருளால் ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. அவர்கள் ஆசையோடும் அன்போடும் அக் குழந்தைக்கு திண்ணன் எனப் பெயரைச் சூட்டினர்.

இப்படியே பல காலங்கள் கடந்தன. திண்ணணாரும் வாலிபப் பருவத்தை எய்தினார். நாகன் தன் முதுமையினால் வேடுவத் தலைமைப் பதவியை திண்ணணனார்க்குக் கையளித்தார். இறைவனின் அருளாள் இறைவனுக்காகப் பிறந்த குழந்தை என்ன செய்தாலும் அது இறைவனுக்கே சொந்தம் ஆகும். இதற்கிணங்க இறைவனும் தன் திருவிளையாடலை ஆரம்பிக்க எண்ணியது மட்டுமன்றி திண்ணணாரின் இறை பக்தியை வெளிப்படுத்தவும் உலகிற்கு அதை உணர்த்தவும் எண்ணினார்.

இறைவனின் எண்ணப்படி வேடுவத் தலைவர் பதவியைப்பெற்ற திண்ணனார் வேடுவ மரபின் படி கன்னி வேட்டைக்குப் புறப்பட்டார். இவர் தனது தோழர்களாகிய நாணன், காடன் என்னும் இருவருடனும் காட்டுக்கு வேட்டையாடச் சென்றபோது பன்றி ஒன்று குறுக்காக ஓடியது. அதைத் துரத்திக்கொண்டு சென்று வேட்டையும் ஆடினார். தம் பசியைப்போக்க மூவரும் சேர்ந்து அருகிலுள்ள பொன் முகலி ஆற்றிற்கு சென்றடைந்தனர். அப் பொன்முகலி ஆற்றிற்கு சற்றுத் தூரம் உள்ள காளத்தி மலையையும் கண்டனர்.

அந்த மலை மீது குடுமித்தேவர் இருக்கிறார், நாம் போனால் கும்பிடலாம் என நாணன் கூறினான். இதைத்கேட்ட திண்ணன் தன் நண்பர்கள் இருவரையும் பிடித்த பன்றியை வட்டச்சுடும்படி கூறிவிட்டு தான் காளத்தி மலையிலுள்ள இறைவனைச் சந்திக்கச் சென்றார். திண்ணனார் மலையில் ஏறவும் ஆரம்பித்தார். மலையை அடைய அடைய திண்ணனுக்கு ஏதோ சுமை குறைந்தது போல் இருந்தது அது மட்டுமன்றி இனம் புரியாத இன்பமும் உள்ளத்தில் தோன்றியது. சிறிது நேரத்தின் பின் அவர் மலை உச்சியையும் அடைந்தார்.

திண்ணனார் காளத்தி மலை உச்சியிலுள்ள காளத்தி அப்பரையும் கண்டு மனமுருகி மென்யன்போடு வழிபட்டார். திருநோக்கல் முன்னுள்ள குணங்கள் மாறி அன்புருவானார். அவ்வேளை மனம் கசிந்து உருகி நின்றார் . திண்ணன் ஐயையோ கொடிய மிருகங்களுள்ள காட்டில் யாதொரு துணையுமில்லாமல் நீர் தனியே இருக்கிறீரே என மனம் வருந்தினார். அதுமட்டுமல்லாமல் எம்பெருமான் பசியோடு இருக்கிறார் என எண்ணி அவருக்கு மெய்யான இறைச்சியைக் கொண்டுவர மீண்டும் மலையின் அடிவாரம் வந்தார்.

மலையின் அடிவாரம் வந்த திண்ணனார் தாமே பச்சைப் பன்றி இறைச்சியை நெருப்பில் வாட்டினார் அவ் இறைச்சியிலும் சிறந்த இறைச்சியைத் தெரிவுசெய்து அதை மென்று பார்த்து சிறந்த மற்றும் சுவையான இறைச்சியைத் தெரிந்தெடுத்தார். அதுமட்டுமன்றி அவற்றைத் தேக்கு இலையில் இட்டு அதைத் தம் கையில் எடுத்தார். பின்பு எம்பெருமானுக்கு திருமஞ்சனம் ஆட்டும் பொருட்டு ஆற்று நீரை தன் வாயில் முகர்ந்தார் அருகில் இருந்த பூக்களைப் பறித்து தன் குடும்மியிலும் செருகிக் கொண்டு மீண்டும் காளத்தி மலையை அடைந்தார்.

காளத்தி மலையை சென்றடைந்த திண்ணனார் தான் கொண்ட வந்த அனைத்தும் எம் பெருமானுக்கு பூச்சூட்டி மஞ்சனம் இட்டு பன்றி இறைச்சியை திருவமுதாகப் படைத்தார். அன்றிரவு முழுவதும் திண்ணன் வீடு செல்லாதும் துங்காததமாய் காளத்தி நாதரைப் பாதுகாத்தார். மறுநாளும் அவர் இறைவனுக்கு உணவு எடுக்கச் சென்று விட்டார். மறுநாள் பொழுது விடிந்து சற்று நேரத்தின் பின் சிவாகம விதிப்படி பூசை செய்யும் பிராமணர் வந்து கீழே சிதறுண்டு இருப்பதையெல்லாம் கண்டு மிகவும் மனம் நொந்து அவற்றை சுத்திகரித்து வீடு சென்றாரர்.

இப்படி பல நாட்கள் தொடந்து நடந்தன. இதைப் பொறுக்க முடியாத பிராமணர் இறைவனிடம் முறையிட்டார் அதன்படி அன்றிரவுஇறைவன்பிராமணரின்கனவில்தோன்றிஅன்பனே "அவன் வடிவெல்லாம் நம்மிடத்தே கொண்ட அன்பே யாம்" எனக் கூறி நாளை நடப்பதையும் மறைந்திருந்து பார் எனக் கூறி மறைந்தார். அதன்படி பூசகரும் மறுநாள் அவ்விடம் சென்று நடப்பதை பார்க்கச் சென்றார். வழமை போல் திண்ணனும் வேட்டையாடி இறைச்சியை இறைவனுக்குப் படைத்த விட்டுக் காவல் இருந்தார்.

சற்று நேரத்தின் பின் இறைவனின் வலக் கண்ணிலிருந்து உதிரம் சொரிந்தது. அதைக்கண்ட திண்ணணன் பதை பதைப்புடன் அங்கும் இங்குமாய் அலைந்தார். கண்ணீர் சொரிந்தார். பின் மூலிகைகளை அரைத்து இறைவனின் கண்ணில் அப்பினார். இருப்பினம் குருதி நிற்கவில்லை. திடீரென ஒரு யோசனை வந்தது. அது என்னவென்றால் ஊனுக்கு ஊண் உடல் வேண்டும் என்பதாகும். உடனே அவர்தான் வைத்திருந்த வில்லால் தன் வலக்கண்ணைத் தோண்டி இறைவனுக்கு அப்பினார்.

இவற்றைறெல்லாம் கண்ட சிவ கோசரி ஆச்சரியத்தின் உச்சத்தை அடைந்தார். மேலும் திண்ணனின் பக்தியை உணர்த்த விரும்பிய இறைவன் தன் இடக்கண்ணிலும் இரத்தத்தைச் சொரிய வைத்தார். இதைக்கண்ட திண்ணன் மேலம் பதைபதைப்புடன் தன் செருப்புக்காலை இறைவனின் இடக்கண்ணில் வைத்துவிட்டு தன்னிடம் மீதம் இருந்த இடக்கண்ணையும் வில்லால் தோண்ட வரும் போது இறைவன் 'நில்லு கண்ணப்பா நில்லு கண்ணப்பா என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்பா என திருவாய் மலர்ந்தார்.

அன்று முதல் திண்ணனார் கண்ணப்பனார் ஆயினார். இவ்வாறு ஆசார சீலரான சிவகோசரியார் கண்ணப்பபரின் உண்மை அன்பை உணர்ந்து கொண்டார். அதைப் போல இறைவன் தன்னலம் அற்ற அன்பிற்கு அடிமையாகும் தன்மையர் என்பதை கண்ணப்பர் வரலாறு எமக்கு எடுத்துரைக்கின்றது. இவ்வாறு கண்ணப்பர் இறைவன் மீது கொண்ட அன்பையும் அவரின் தோற்றப் பொலிவையும் வியந்து திருநாவக்கரசு நாயனார் 'காப்பதோர் வில்லும் அம்பும் எனத் தொடங்கும் தேவாரப் பாடலைப் பாடினார்.

**அபீனி அருள்நிதி**

# பெரிய புராணம்

புராணம் என்றால் முன்னம் நடந்தது எனப் பொருள்கொள்ளும் நிலையில் திருத்தொண்டர் புராணம் என்பது திருத்தொண்டர்களது வரலாற்று நிகழ்வுகளை எடுத்துரைப்பதாகும். புராணம் என்ற சொல் பழமையை குறிப்பதோடு புதுமையையும் குறிக்கின்றது. புரா-நவம் ஸ்ரீபுராணம் இதில் 'புரா' என்ற சொல் பழமையைக் குறிப்பதாகவும், நவம் என்பது புதுமையை குறிப்பதாகவும் அமைகின்றது. மேலும் பூரணாகிய பெருமானிடமிருந்து வந்தமையால் பூரணம் என்று வழங்கி பின்னர் அச்சொல்லே புராணம் என திரிந்தது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழர் சமயப் பரப்பில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சி பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழரால் உயரிய நிலையில் நிலைநிறுத்தப்பட்டது. பக்தியின் பயனையும் திருத்தொண்டின் சிறப்பினையும் எளிதில் மக்கள் அறிந்து அவ்வழி ஒழுகுவதற்கு உரிய வழிவகைகளை உரைப்பதற்கு சோழர்காலத்தில் பிரசித்தமாய் இருந்த காப்பிய இலக்கிய வடிவம் தேவைப்பட்டது. வடமொழி இலக்கண முறையில் இருந்த காப்பிய மரபுக்கூடாக தமிழர் சமயத்தையும், பண்பாட்டையும் உணர்த்துவது சிக்கல் நிறைந்ததனால் தான் தமிழுக்கென புதியதொரு காப்பிய வடிவமைபினை உருவாக்கி 'தன்னிகரில்லாத் தலைவன்' என்ற வடமொழி காப்பிய மரபில் இருந்து விலகி சாதாரண அடியவர்களைகாப்பியத்தலைவராகக்கொண்டுசெந்தமிழுக்கும் சிவநெறிக்கும் அரணாக அமைந்ததே திருத்தொண்டர் புராணம் ஆகும். இது சேக்கிழார் இட்ட பெயராகும்.

பெரிய புராணத்தினை சேக்கிழார் இயற்றினார். இப் புராணத்தினைப்பற்றி தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பெரியபுராணம் புனைந்துரைக்கப்பட்டதன்று, அதுவொரு வரலாற்று நூல், வாழ்வாங்கு வாழ்ந்த சான்றோர்களின் சரித நூல், பக்திச்சுவை நலம் பாரிக்கும் பெருநூல், இன்ப அன்பினை இடையராது விளைவிக்கும் இன்பத் தமிழ் மறைநூல்,திசையனைத்தின்பெருமையெல்லாம்தென்திசையே வென்றேறச் செய்திருநூல், அசைவில் செந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்லத் தோன்றிய அரிய பெரிய அருள் நின்ற விறல் நூல், தமிழ்மொழியின் இசை முழுவதும் மெய்யறிவும் கொண்டு விளங்கும் முழுமுதல் நூல், என்று குறிப்பிடுகின்றார்.

திருத்தொண்டர் புராணம் திருமலைச் சுருக்கம் தொடங்கி வெள்யானைச் சுருக்கம் ஈறாக பதின்மூன்று சுருக்கங்களை கொண்டுள்ளது. ஒரு பெருங்காப்பியத்தினை படிப்பவர்களது உள்ளத்தினை ஈர்க்கும் உத்திமுறைகளில் ஒன்றாக காப்பியக் கட்டுக்கோப்பு அமைகிறது. அந்த வகையில் இப்புராணத்தில் வருகின்ற காப்பியத்தலைவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் உலகிலே தோன்றுவதற்குரிய காரணத்தினை முதலிலே கூறுவதற்காக திருமலைச்சுருக்கம் என்ற ஒரு பகுதியினை அமைத்திருக்கின்றார். பிறகாப்பியங்கள் காப்பியத் தலைவனின் பிறப்பில் இருந்து தொடங்க இது காப்பியத் தலைவனின் பிறப்பிற்கு முன்னிருந்தே தொடங்குவது சிறப்பானது ஆகும். சைவசித்தானந்தத்தின் தொடக்கம் சுந்தரரில் இருந்தே தொடங்குவதை இது காட்டுகின்றது.

இவ்வாறு சுந்தரர் நிலவுலகில் வந்து தோன்றிய பின் தன்னை மறக்க இறைவன் அவரை மறவாது தக்கதருணத்தில் வந்து தடுத்து ஆட்கொண்டு அருளிய கருணையினால் அப்பெருமானிலிருந்தும், அவனை வழிபடுகின்ற அடியவர்களிடத்திலும் அடிமைத்திறம் பேணி வருமாறுசெய்வித்தருளியபகுதிதடுத்தாட்கொண்டபுராணத்தில் கூறி சுந்தரரால் பாடப்பட்ட திருத்தொண்டர் தொகைவழி அடியவர்களின் வரலாற்றையும் அந்த வரலாற்றுகளோடு இயைந்து போகும் காப்பியத்தலைவரின் வரலாற்றையும் இடையிடையே அமையுமாறு செய்து திருக்கயிலை சென்று பெருவாழ்வு பெற்று நிற்கும் திறத்தினை வெள்ளாயானைச் சுருக்கத்தில் நினைவுபடுத்தி இருக்கும் கட்டுக்கோப்பு வேறு காப்பியங்களில் அமைந்து இருக்காத சிறப்பாகும்.

இத்தகைய உயரிய, சிறிய சிறப்பினை பெற்று விளங்கும் திருத்தொண்டர் புராணம் காலத்துக்கு காலம் பல பதிப்புக்களையும் பல வகைப்பட்ட உரைகளையும் பெற்று அறிஞர் பெருமக்களால் போற்றப்படும் சைவ வாழ்வியல் களஞ்சியமாக விளங்குகின்றது. தமிழ்மரபும் சமயமரபும் இணைந்ததனிப்பெரும்தமிழ்க்காப்பியமாகவும்விளங்குகிறது. இதற்கு எழுதப்பட்ட பல வகையான உரைகளில் இங்கு நோக்கப்படுவது சூசனம் ஆகும்;. உரைகள் எல்லாம் பாடல் பொருளை மட்டும் குறிப்பனவற்றை அவை சார்ந்துள்ள பொருள் நியதிக்கோட்பாடுகளையும் தத்துவங்களையும் விளக்குகின்ற மக்கள் ஊடகமாகவும் விளங்குகின்றன. இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் சூசனம் உரையாக அன்றி சமயதத்துவ உண்மைகளை விளக்கும் ஆய்வுக்களஞ்சியமாக சைவசித்தாந்த ஞானக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது.

சைவ சமயத்தின் சிவ நெறிக் கொள்கைகளை விளக்கி உரைக்கும் காப்பியம் பெரியபுராணம். சைவசமயம் உணர்வு மார்க்கம், அறிவுமார்க்கம் என்ற இரு தளநிலைகளில் இருந்து வளரந்;த சமயம் ஆகும். இவற்றில் அறிவுமார்க்கத்தின் கட்டமைவியலை குறிப்பிடுவதே சைவசித்தாந்தம் ஆகும். சைவ சமயத்திற்கே உரிய சிறப்பு நிலைச்சட்டமாக இது விளங்குகின்றது. தென் இந்திய தமிழர்களுடைய அரிய பெரிய தத்துவமாகவும் பேரறிவின் பெரும் பயனாகவும் சைவசித்தாந்தம் விளங்குகின்றது. பிற சமய தத்துவ ஆராய்ச்சி வகைகளையும் வழிபாட்டு முறைகளையும் விட சைவ சித்தாந்தம் பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்டதாக விளங்குகின்றது. பிற சமயங்களும் தத்துவங்களும் அயலவருக்குரியதாகவும் அண்மையில் தோன்றியதாகவும் இருக்க ஆராய்ச்சி துறையிலும் கொள்கை வாழ்க்கை என்பவற்றை உணர்த்தும் முறையிலும் மிக சிறந்ததொன்றாக சைவசித்தாந்தம் விளங்குகிறது.

பெரியபுராணம் பதின்மூன்று சருக்கங்களை கொண்டுள்ளது. இதற்கு சூசனம் வரைந்த ஆறுமுகநாவலரும், இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா அவர்களும் 75 பெரும் தலைப்புக்களும் நூற்றுமுப்பத்துரெண்டு சிறு தலைப்புக்களாகவும் இதற்கு சூசனம் வரைந்து உள்ளனர். இச் சூசனத்தில் காணப்படுகின்ற சைவசித்தாந்த கருத்துக்களை எடுத்துரைப்பதே இந்நூலின் நோக்கமாகும்.

**கேதீஸ்கரன் சானுஜா**

## ஐந்து ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கையின் கால்நடைத் துறையின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வலுவான உறவு இந்தச் சந்திப்பில் மேலும் உறுதிப்படுத்தப்பட்டதுடன், பல்வேறு துறைகளில் அந்த உறவுகளை மேம்படுத்துவது குறித்து இரு தரப்பினரும் கவனம் செலுத்தினர்.

இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஆணையர் அந்தலிப் எலியாஸ் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

இந்த சந்திப்பில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு உயர்ஸ்தானிகர் எலியாஸ் வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கத்தின் தலைவரான முஹம்மத் யூனுஸ் அவர்களின் வாழ்த்துச் செய்தியும் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

இங்கு ஜனாதிபதியும் பங்களாதேஷ் உயர்ஸ்தானிகரும் இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடினர்.

பங்களாதேஷின் உயர்ஸ்தானிகர் மற்றும் ஜனாதிபதி திசாநாயக்க ஆகியோர் பங்களாதேஷில் இலங்கையின் முதலீடு மற்றும் அங்கு பணிபுரியும் பெருமளவான இலங்கைபணியாளர்கள்குறித்தும்விசேடமாக கலந்துரையாடினர். மேலும், இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள இலங்கைக்கும் பங்களாதேஒக்கும் இடையில் தற்போதுள்ள முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மற்றும் உயர்ஆணையர் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் உறுதியளித்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவது மற்றும் பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்தும் இந்த சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் ஹிஷாம் அபு தாஹா நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

இச்சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த தூதுவர் அபுதாஹா, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியதற்காக பலஸ்தீன அரசாங்கத் தினதும் மக்களினதும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

பலஸ்தீனத்திற்கு இலங்கை வழங்கும் நீண்டகால ஆதரவைப் பாராட்டிய தூதுவர், பலஸ்தீன் எதிர்நோக்கிய சர்வதேசப் பிரச்சினைகளில், இலங்கை பின்பற்றிய நிலையான நடவடிக்கைகளுக்கு தனது நன்றியையும் தெரிவித்தார்.

எதிர்காலத்திலும் இலங்கையின் நட்புறவையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்தும் பேண பலஸ்தீன் எதிர்பார்ப்பதாகவும் தூதுவர் வலியுறுத்தினார்.

பலஸ்தீன மக்கள் எதிர்நோக்கும் விசா பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடிய தூதுவர் அபுதாஹா, இரு நாடுகளுக்கும் இடையிலான மனிதவள தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்தக் கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்தச் சந்திப்பில், இலங்கைக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் நிலவும் வலுவான உறவுகள் மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தவும் இரு தரப்பினதும் அர்ப்பணிப்பு உறுதிசெய்யப்பட்டது.

துருக்கி குடியரசின் தூதுவர் செமி லுதுபி துர்குட் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்த தூதுவர், துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்டோகன் மற்றும் துருக்கி மக்களின் வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் துருக்கி ஜனாதிபதி எர்டோகன் 'இலங்கையின் ஜனாதிபதியாக நீங்கள் தெரிவுசெய்யப்பட்டதற்கு எனது நாட்டின் சார்பாகவும், மக்களின் சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் பதவிக்காலம் வெற்றிகரமாக அமைய வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன். உங்கள் தலைமையில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம் இலங்கை முழுவதும் வாழும் மக்களுக்கு சமாதானத்தையும் செழிப்பையும் கொண்டுவரவும் அவர்களை வலுப்படுத்தவும் உதவும் என்று நான் உண்மையாக நம்புகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாத்துறை, வேலைவாய்ப்பு மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் துருக்கிக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் துருக்கி தூதுவருடன் ஜனாதிபதி கலந்துரையாடினார். துருக்கியில் புலம்பெயர் தொழிலாளர்களின் கேள்வி அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டிய துருக்கித் தூதுவர், எதிர்காலத்தில் இலங்கையர்களுக்கு பல்வேறு துறைகளிலும் அதிக வேலை வாய்ப்புகள் அளிக்கப்படும் என உறுதியளித்தார்.

துருக்கியில் கல்வி கற்க இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் கல்வித் துறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தவும் தூதுவர் உடன்பாடு தெரிவித்தார்.

துருக்கி-இலங்கை இருதரப்பு உறவு களை வலுப்படுத்தும் அடையாளமாக துருக்கிக்கான உத்தியோகபூர்வ விஜயத்தில் கலந்துகொள்ளுமாறு துருக்கித் தூதுவர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு அழைப்பு விடுத்தார்.

## குருசுவாமியும்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என தெரிவித்தார்.

கொழும்பு ஸ்ரீ சூர்யாஸ் ஹோட்டலில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 40 வருட காலமாகத் தமிழ்ச் சமூகப் பொதுச் சேவைகளைச் செய்துவருகின்றேன். இக்காலகட்டத்தில் மூன்று முறை கொழும்பு மாநகர சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளேன். 2015 ஆம் ஆண்டு மேல் மாகாணசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு நான்கு வருடங்களாக அப்பதவியில் இருந்தும் பணியாற்றியுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பாக, அரசியல்வாதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக மக்களின் வாக்குபலத்தால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தங்களின் கடமைகளை நேர்மையாகச் செய்வதில்லை என்பது எல்லோரும் அறிந்த விடயம். நானும் இதனை அறிவேன். இவ்வாறான பிழையான போக்கை மாற்ற முடியாமல் முடிந்தளவு போராடியுள்ளேன். இவை சாத்தியப்படாமையினால் தான் மேற்படி கட்சிப் பதவிகளிலிருந்தும் கட்சியிலிருந்தும் வெளியேறியுள்ளேன்.

தன்னை ஒரு கடவுளாகக் கருதி நேரடிப் பிரதிநிதிகள் போல நினைத்துக்கொண்ட ஒரு சிலர் பதவிகளையும் வாய்ப்புக்களையும் முழுவதுமாக பெற்றுக்கொண்டு, தமது சமூகத்தினது பிரச்சினைகள் என்னவென்று அறிந்திருந்தும் அவற்றிற்குத் தீர்வினை காண எந்தவித ஆக்கபுர்வ நடவடிக்கைகளையும் எடுக்காமையின் விளைவு கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகளாக வெளிவந்திருக்கிறது.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலிலும் இதே நிலைமைதான் ஏற்படப்போகின்றது என நினைக்கின்றேன். அரசியல்வாதிகள் மீது வெறுப்படைந்த மக்கள் மாற்றத்தையும் ,ஊழலற்ற அரசியலையும் எதிர்பார்த்தே 'தேசிய மக்கள் சக்தியை' ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.

இந்த மாற்றத்தின் மூலம் நாட்டிலே புதிய கலாச்சாரம் உருவாகும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது. அந்த நம்பிக்கைக்கு ஏற்றாற்போல தானும் செயற்பட விரும்புகின்றேன். எனது எதிர்கால அரசியல் பயணத்தை சமூகம் சார்ந்து செம்மையாகவும் உண்மையாகவும் நடாத்த எத்தனித்துள்ளேன்.

அதற்குரிய கால அவகாசமாகவே இம்முறை இடம்பெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்கு தீர்மானித்துள்ளேன். இது எனது தனித்த முடிவன்று. (08) ஆம் திகதி என்னால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துரையாடி எடுக்கப்பட்ட தீர்மானம் ஆகும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் என தெரிவித்தார்.

## அனுமதி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்களுக்கும் பெறுமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

அரச நிதியைப் பெற்று மேற்கொள்ளப்படும் பணிகளை ஏற்பாடு செய்யும்போது அரசின் கொள்கை மற்றும் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக செயற்படுவது அவசியமானது எனவும் ஜனாதிபதியின் செயலாளர் அரச நிறுவனங்களுக்கு மேலும் அறிவித்துள்ளார்.

அனைத்து அமைச்சின் செயலாளர்கள், அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபன சபைகள் உள்ளிட்ட சட்டபூர்வ நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரசிற்கு சொந்தமான நிறுவனங்களின் தலைவர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் எழுத்து மூலம் இந்த அறிவித்தலை வழங்கியுள்ளார்.

## மாவையின் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவஞானம் சிறீதரனால், யாழ். மாவட்டச் செயலகத்தில் கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தந்தை செல்வா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர், கட்சியின் தலைவரை அவரது இல்லத்தில் சந்தித்து ஆசிபெறச் சென்ற சிறீதரனுக்கு வாழ்த்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

மேலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கொள்கைகள் வெற்றிபெற நீங்கள் செயற்படவேண்டும் தேர்தலில் வென்றுவரத் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

## ஜனநாயகக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைக்காக போராடியவர்கள். அந்த விடுதலையை அகிம்சை வழியில் பெறுவதற்காக நாங்கள் இன்று தேர்தலில் போட்டியிடுகிறோம்.

அற்ப சலுகைகளைகளுக்காக நாங்கள் துணை போகமாட்டோம். தமிழ் மக்களுக்கு தலைமைதாங்குவதற்கு நாங்கள் இருக்கிறோம். நீங்கள் கவலையடைய வேண்டாம். இனத்தின் விடுதலையினை நோக்கிச் செல்லும் சின்னமாக சங்கு சின்னம் இருக்கிறது.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கூடுதலான ஆசனங்களை பெறாது. எனவே, தமிழர்களாகிய நாங்கள் அதிக ஆசனங்களை இனத்தின் சார்பாக வெல்கின்றபோது நிர்ணயிக்கும் சக்தியாக நாங்கள் மாறுவோம். அதில் எந்த மாற்றுக்கருத்தும் இருக்காது.

எமது கூட்டமைப்பு இந்த தேர்தலில் 11 ஆசனங்களை பெறும். 10 ஆசனங்கள் மக்களால் தெரிவுசெய்யப்படும் என்பதுடன் தேசியப்பட்டியலில் ஒரு ஆசனம் கிடைக்கும்.

பதினொரு ஆசனங்களை கொண்டு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கையினை நாம் எடுப்போம். இதேவேளை அரசுக்கு ஆதரவளிக்கும் சூழலுக்கு நாங்கள் இன்னும் வரவில்லை என்றார்.

## தேசிய மக்கள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது எட்டாகப் பிளவுபட்டுள்ளது, ஐக்கிய தேசியக் கட்சி பெயருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இல்லாமல் போய்விட்டது.

கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. அவ்வாறே பொதுத் தேர்தலிலும் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பகுதி மக்களும் திசைகாட்டியை சுற்றித் திரண்டுவருகின்றனர்.

நாவலப்பிட்டி தொகுதி மஹிந்தானந்த அளுத்கமவின் கோட்டையாக மாறியிருந்த நிலையில், அக் கோட்டையை ஜனாதிபதி தேர்தலில் பிரதேச மக்கள் உடைத்துள்ளனர்.

தற்போது ஜனாதிபதி உட்பட இரண்டு அமைச்சர்கள் நாட்டின் அத்தியாவசிய சேவைகளை மாத்திரம் பேணுவதற்கு செயற்பட்டு வருவகின்றனர். பொதுத் தேர்தலின் பின்னர் அமைச்சரவை மற்றும் பிரதி அமைச்சர்களை அமைச்சுக்களுக்கு நியமித்ததன் பின்னர் தேசிய மக்கள் சக்தி அனைத்தையும் நிறைவேற்றும் வகையில் செயற்படும் என்றார்.

## மகிந்த, ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டார்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் சார்பாக ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட நாமல் ராஜபக்ஷ தேர்தலில் நேரடியாக போட்டியிடாமல் அவரது பெயர் தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அக்கட்சி தெரிவித் துள்ளது.

எனினும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சசீந்திர ராஜபக்ச மொனராகலை மாவட்டத்திலும், நிபுண ரணவக்க மாத்தறை மாவட்டத்திலும் போட்டியிடவுள்ளார் என்று அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது

## ஷானி மீண்டும்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவை மீண்டும் பொலிஸ் சேவையில் நியமிக்க பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

முன்னதாக, அவர் தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கும் பொலிஸார் தரப்பில் அணியொன்றை உருவாக்கியதோடு, அநுரகுமாரவின் தேர்தல் பிரசார மேடையிலும் ஏறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலஞ்ச ஊழல்...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடவெல இதற்கு முன்னர் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக (சட்டப் பிரிவு) கடமையாற்றினார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றிய கனிஷ்க விஜேரத்ன கடந்த 7ஆம் திகதி ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி அந்த பதவியில் இருந்து விலகினார்.

விஜேரத்னவை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக நியமித்தமை அரசியலமைப்புக்கும் சட்டத்துக்கும் முரணானது என ஊடகவியலாளர் ஒருவரும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனமொன்றும் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்த நிலையில் அவர் தனது பதவியிலிருந்து விலகியிருந்தார்.

## பொதுத்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாகச் செயற்பட்டது.

இருப்பினும் 2024 பொதுத் தேர்தலில் தமது கட்சியிலிருந்து எவரும் போட்டியிட மாட்டார்கள் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி தமது கட்சியுடனான ஒப்பந்தத்தை மீறியதால் அதற்கான தமது ஆதரவை விலக்கிக் கொள்வதாகவும் கட்சித் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானம் அவசியம்

# காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? ஜனாதிபதி அநுர வெளிப்படுத்தவேண்டும்

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து



பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களிற்கு என்ன நடந்தது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் புதிய அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஜெனீவாவிற்கான பிரதி இயக்குநர் லூசி மக்கேர்னன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது - இலங்கையில் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும், கடந்தகால அட்டூழியங்களிற்குநீதியை தேடும் முயற்சிகளிற்கு இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைபேரவைதீர்மானம் மிகவும் அவசியமானது.

பாதிக்கப்பட்டவர்களிற்கும் அவர்களது குடும்பத்தவர்களிற்கும் நீதி மறுக்கப்படுவது தொடர்ந்தால் இலங்கை தொடர்பில் சர்வதேச நடவடிக்கை அவசியம்.

பலவந்தமாக காணாமலாக் கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களிற்கு என்ன நடந்தது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் புதிய அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும், நீதியை தேடும் பாதிக்கப்பட்டவர்களை மனித உரிமை செயற்பாட்டாளர்களை பாதுகாப்பு படையினர் துன்புறுத்துவதை நிறுத்தவேண்டும் முன்னைய அரசாங்கங்களால் தடுக்கப்பட்ட குற்றங்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். - என்றார்.(05)



# முன்னாள் ராஜாங்க அமைச்சரின் வங்கிக் கணக்குகள் முடக்கம்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவலின் இரண்டு வங்கி கணக்குகளை முடக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் ஒரு பகுதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சரின் இரண்டு வங்கி கணக்குகளை 2025 ஜனவரி நான் காம் திகதி வரை முடக்கி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)

# கெப் வாகனம் மோதி ஒருவர் பரிதாப சாவு

## சாரதி தப்பியோட்டம்

பமுனுகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்கொழும்பு - உஸ்வெட்டகெய்யாவ வீதியில் உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பமுனுகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

நீர்கொழும்பிலிருந்து உஸ்வெட்டகெய்யாவ நோக்கிப் பயணித்த கெப் வாகனம் ஒன்று வீதியோரத்திலிருந்த நபர் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, படுகாயமடைந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, கெப் வாகனத்தின் சாரதி பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பொருளாதாரம் ஸ்திரமான நிலையில் இருந்தாலும் இலங்கை சீர்திருத்தங்களைத் தொடர்வது அவசியம்

## உலக வங்கி தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார நிலை ஸ்திரமடைந்துள்ளது என தெரிவித்துள்ள உலக வங்கி சீர்திருத்தங்களை தொடர்வது அவசியம் என குறிப்பிட்டுள்ளது.

2024 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4.4 வீதமாக காணப்படும் என தெரிவித்துள்ள உலக வங்கி முன்னைய எதிர்வுகூறல்களை விட இது முன்னேற்றகரமான நிலையென குறிப்பிட்டுள்ளது.

தொழில்துறை மற்றும் சுற்றுலாத்துறையில் நான்குகாலாண்டுகளாகஏற்பட்டுள்ள முன்னேற்றமும் முக்கியமான கட்டமைப்பு மற்றும் கொள்கை சீர்திருத்தங்களுமே இதற்குக் காரணம் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

எனினும் பொருளாதார மீட்சி இன்னமும் பலவீனமான நிலையிலேயே உள்ளது என குறிப்பிட்டுள்ள உலக வங்கி நுண்பொருளாதார ஸ்திரதன்மையை பேணுதல், கடன்மறுசீரமைப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்வது, வருமானத்தை அதிகரித்து வறுமையை குறைப்பதற்காக கட்டமைப்பு சீர்திருத்தங்களை தொடர்ந்து முன்னெடுப்பது ஆகியவற்றிலேயே பொருளாதார மீட்சி தங்கியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.(05)

# வாழைத்தோட்ட பெண் கொலை : சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, வாழைத்தோட்டம், டெக்னிக்கல் சந்தி பகுதியில் கடந்த 7 ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குண உத்தரவிட்டுள்ளார்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு, வாழைத்தோட்டம், டெக்னிக்கல் சந்தி பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கடந்த 8 ஆம் திகதி கைது செய்யப்பட்டு புதன்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கும் சந்தேக நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (05)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் சாவு; ஒருவர் காயம்

பண்டாரகமை - களுத்துறை வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என பண்டாரகமை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

செலுத்துனரின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, மோட்டார் சைக்கிளின் செலுத்துனரும் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபரும் காயமடைந்துள்ள நிலையில் பண்டாரகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர் மோட்டார் சைக்கிள் செலுத்துனர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பண்டாரகமை பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகமை பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.(05)

# போலிக் கடவுச்சீட்டுகளுடன் 8 பங்களாதேஸியர்கள் கைது

8 பங்களாதேஷ் பிரஜைகளில் ஒருவர் போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி கட்டாரில் இருந்து தோஹா வழியாக சேர்பியாவுக்கு தப்பிச் செல்வதற்காக புதன்கிழமை இரவு 08.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றுள்ளார்.

இதன்போது, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரிடம் இருந்த ஆவணங்கள் போலியானவை என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணையில் போலி கடவுச்சீட்டை தயாரிக்க சந்தேக நபருக்கு உதவி செய்ததாக கூறப்படும் மற்றுமொரு பங்களாதேஷ் பிரஜை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் சேர்பியாவுக்கு தப்பிச் செல்வதற்காக மேலும் 06 பங்களாதேஷ் பிரஜைகள் காத்திருப்பதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இணைந்து, இந்த பங்களாதேஷ் பிரஜைகளை கைது செய்து, அவர்களை குடிவரவுத் திணைக்களத்தின அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# பிரதமர் ஹரிணி அமரசூரிய வேட்புமனுவில் கையெழுத்து



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக பிரதமர் ஹரிணி அமரசூரிய புதன்கிழமை கையெழுத்திட்டுள்ளார்.

இவர் உட்பட இருபது பேர் வேட்புமனுக்களில் கையொப்பம் இட்டுள்ளனர்.

இதன்போது, அர்ப்பணிப்பும், திறமையும், தொலைநோக்கு பார்வையும் கொண்ட அணியை வழிநடத்தி, கொழும்பு மாவட்டத்தில் மாத்திரமன்றி முழு நாட்டிலும் தேர்தல்களில் மாபெரும் வெற்றியடைய உறுதியாக உள்ளோம் என பிரதமர் தெரிவித்துள்ளார்.(05)

# மாதம்ப பகுதியில் திடீரென தீப்பிடித்து எரிந்தது பேருந்து

கொழும்பிலிருந்து 50 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் எம்பிலிபிட்டியவைநோக்கிபயணித்துக்கொண்டிருந்தபஸ்திடீரென தீப்பிடித்து எரிந்த சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

மாதம்ப கவுடுவாவ பகுதியில் பஸ் திடீரென தீ பரவியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் அதிஸ்டவசமாக பயணிகள் எவரும் பாதிக்கப்படவில்லை.

அந்த பகுதி மக்களின் உதவியுடன் தீயை கட்டுப்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். எனினும் பஸ் முற்றாக எரிந்துவிட்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மூன்றுமாவட்டங்களுக்குமண்சரிவுஅபாயஎச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

காலி, களுத்துறைமற்றும்மாத்தறைஆகியமூன்று மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விசேடமாக, களுத்துறைமாவட்டத்தில்தொடங்கொட , புளத்சிங்கள , மத்துகம, ஹொரனை மற்றும் வெல்லவிட்ட ஆகிய பிரதேசங்களுக்கும் , காலி மாவட்டத்தின் நாகொடை மற்றும் எல்பிட்டிய ஆகிய பிரதேசங்களுக்கும் மாத்தறை மாவட்டத்தில் அக்குரெஸ்ஸ பிரதேசத்திற்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(05)

### கிளிநொச்சியில் இருந்து யாழுக்கு

# சட்டவிரோதமாக மாடுகளை கடத்தி சென்ற இருவர் கைது

கிளிநொச்சி பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சட்டவிரோதமான முறையில் மாடுகளை கடத்தி சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 19 மாடுகள் உயிருடனும் ஒரு மாடு உயிரிழந்த நிலையிலும் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பகுதியில் இருந்து புதன்கிழமை லொறி ஒன்றில் 20 மாடுகளை ஏற்றி யாழ்ப்பாணத்திற்கு கடத்தி வந்துள்ளனர்.

இந்தவிடயம்தொடர்பில்சாவகச்சேரிபொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மீசாலை பகுதியில் வைத்து லொறியை வழிமறித்துள்ளனர்.

அதன்போது லொறியில் இருந்த 20 மாடுகளில் ஒரு மாடு உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளது. அதிக மாடுகளைஏற்றியமையால்நெரிசலால்மாடுஉயிரிழந்து இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து மாடுகளை கடத்தி வந்த லொறி சாரதி மற்றும் அவரது உதவியாளர் ஆகியோரை பொலிஸார் கைது செய்ததுடன், மாடுகளையும் லொறியையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட இருவரையும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(05)

# மல்வானையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் படுகொலை

### சந்தேகநபர் கைது

பியகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்வானை பகுதியில் உள்ள வீடொன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் கடந்த செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

மல்வானை பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்த கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவருக்கும் சந்தேக நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பு மாவட்டத்தில் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்படும் நோயாளர்: எண்ணிக்கை அதிகரிப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு




தற்போது மார்பக புற்று நோயால் பாதிக்கப்படுகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்திலே மிகவும் அதிகரித்து காணப்படுகின்றன. இதனை நாங்கள் விழிப்புணர்வு வழுங்குவது மாத்திரமில்லாமல் முதற்கட்டமாக பெண்கள் சுய மார்பு பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய அதிகாரி ஆர்.முரளீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மார்பக புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் வியாழக்கிழமை மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒவ்வொரு சுகாதார உத்தியோகஸ்தர்களும் ஒவ்வொரு சுகாதார தூதுவர்களாக விளங்கி பணிபுரிகின்ற அனைத்து அலுவலகங்களிலும் மக்களுக்கு மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்.

மேலும், உத்தியோகஸ்தர்கள் குடும்பங்களிலும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும், அதுவே சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதாக அமையும்.

தற்போது மார்பக புற்று நோயால் பாதிக்கப்படுகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்திலே மிகவும் அதிகரித்து காணப்படுகின்றன. இதனை நாங்கள் விழிப்புணர்வு வழுங்குவது மாத்திரமில்லாமல் முதற்கட்டமாக பெண்கள் சுய மார்பு பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக பெண்கள் 20 வயதில் இருந்தும், பின்னர் 35 வயதில் இருந்து பரிசோதனைகளை பெண்கள் மேற்கொள்ள வேண்டும். அதற்காக பொது சுகாதார மாதுக்கள் ஆலோசனைகளை வழுங்குவார்கள்.

35 வயதிலிருந்து பெண்களுக்காக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் பெல் மூமண்ட் கிளினிக் எனப்படும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெண்கள் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது, 3 வருடத்திற்கு ஒரு தடவை ஏனும், இந்த பரிசோதனையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவற்றுக்கு மேலாக உடலில் ஏதேனும் சந்தேகங்கள் ஏற்படுமிடத்து, மார்பகங்களில் அல்லது உடலில் வேறு ஏதும் இடங்களிலும் சிறு கட்டிகள் உருவாகும் என சந்தேகப்பட்டால், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இயங்கிவரும் புற்று நோயை ஆரம்பத்திலேயே அறிகின்ற ஒரு சுகாதார சேவை நிலையத்திற்குச் சென்று பரிசோதனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்த நிலையத்தின் தொலைபேசி இலக்கம் என்பன இருக்கின்றன அதனுடன் தொடர்பு கொண்டு முன்கூட்டியே அனுமதிகளை பெற்றுக் கொண்டு எது வித தாமதம் இன்றி இரகசியமான முறையில் நிலையத்திற்கு நேரிலே சென்று பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும்.

மேலதிக வைத்திய ஆலோசனைகள் மேலதிக ஸ்கேன் வசதிகளையும் பெற்றுக் கொள்ள முடியும். சிகிச்சைகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்காக அந்த நிலையம் காத்திருக்கின்றது என அவர் இதன்போது தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமான விழிப்புணர்வு பேரணி களுவாஞ்சிகுடி பிரதான வீதியூடாகச் சென்று பட்டிருப்பு வீதி வழியாகச் சென்று மீண்டும் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையைச் வந்தடைந்தது.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை, களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு பிரந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோய் பிரிவு, இலங்கை புற்றுநோய் சங்கத்தின் மட்டக்களப்பு பிரிவினர், உள்ளிட்ட பலரும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.







இதன்போது கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் செயலாளர் எந்திரி என்.சிவலிங்கம், களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் க.புவநேந்திரநாதன், பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன், வைத்திய நிபுணர் கருணாகரன் மற்றும் வைத்தியசாலை உத்தியோகஸ்த்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.10.2024இல் வெளியிடப்பெற்றது